**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

**CC. No: 119/2026** Date: 02.07.2026

**Prosecution Witness**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | **PW : 1** |
| Name | : | பரமேஷ்வரி, தலைமை காவலர் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Age | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 02.07.2026.

**முதல் விசாரணை**

நான் தற்போது தருமபுரி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்துவருகிறேன். கடந்த 27.07.2024 –ம் தேதி 17.00 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.s.முருகன் அவர்களின் உத்தரவின்பேரில் நானும், தலைமை காவலர் 162, திரு. கபில்தேவ் என்பவரும் மதுவிலக்கு குற்றம் சம்பந்தமாக தருமபுரி நகர காவல் நிலைய எல்லைக்குட்பட்ட சவுளூர் அருகே கண்காணித்து வந்தபோது நடராஜ் என்பவரின் மகன் கார்த்திக் என்பவர் எங்களை பார்த்து ஓட எத்தனித்தவரை சந்தேகத்தின் பேரில் பிடித்து விசாரித்தபோது தலா 180 ML அளவுகொண்ட 27 Express Brandy பாட்டில்களை வைத்திருந்தார். எதிரியை விசாரித்தபோது மதுபாட்டில்களை விற்பனை செய்வதற்காக வைத்திருந்ததாக ஒப்புக்கொண்டார். சம்பவ இடத்தில் வைத்து மேற்படி எதிரியிடமிருந்து மேற்படி தலா 180 ML அளவுகொண்ட 27 Express Brandy பாட்டில்களை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார். அதில் தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லாததால் நானும், தலைமை காவலர் திரு. கபில்தேவ் என்பவரும் கையொப்பம் செய்தோம். **கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.1 ஆகும்.** பின்னர் எதிரியை கைதுசெய்து நிலையம் அழைத்துவந்து வழக்கு பதிவுசெய்தார். இது சம்பந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

சம்பவ இடத்திற்கு அருகில் நிறைய வீடுகள் இருந்தது என்றால் சரிதான். அவர்கள் யாரும் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் பாட்டில்கள் எவ்வாறு இருந்தது என்றால் சுமார் 3 பாட்டில்கள் மூடி திறந்த

நிலையில் இருந்தது. கைப்பற்றுதல் மகஜரில் அனைத்து பாட்டில்களும் மூடி லேசாக திறந்த நிலையில் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பாட்டில்கள் எவ்வாறு அழிக்கப்பட்டது என்றால் மதுபானங்களை கீழே கொட்டப்பட்டு, பாட்டில்கள் பாதுகாப்பான இடத்தில் அழிக்கப்பட்டது. கைப்பற்றப்பட்ட மதுபாட்டில்களை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். நான் சம்பவ இடம் செல்லவில்லை என்றும், காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்ட ஆவணத்தில் கையொப்பம் செய்து பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

TAMIL ARASU A

Digitally signed by TAMIL ARASU A
Date: 2026.07.02 17:24:58 +0530

**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

**CC. No: 119/2026** Date: 02.07.2026

**Prosecution Witness**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | **PW : 2** |
| Name | : | S. முருகன், சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Age | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 02.07.2026.

**முதல் விசாரணை**

நான் தற்போது இண்டூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 27.07.2024 ம் தேதி 17.00 மணிக்கு தருமபுரி மதுவிலக்கு அமல் பிரிவில் நான் பணியிலிருந்தபோது எனக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில் தருமபுரி நகர காவல் நிலைய எல்லைக்குட்பட்ட சவுளூர் அருகில் கண்காணித்தபோது நடராஜன் என்பவரின் மகன் கார்த்திக் என்பவர் தலா 180 ML அளவுகொண்ட Express Brandy – 27 பாட்டிலை வைத்திருந்தார். அதை பரிசோதித்தபோது அது லேசாக மூடி திறந்த நிலையில் இருந்தது. அரசு அனுமதியின்றி சில்லறை விற்பனை செய்வதற்காக வைத்திருப்பதாக தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதின்பேரில் தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராததால் என்னுடன் அலுவலில் இருந்து பெண் தலைமை காவலர் 413 , திருமதி. பரமேஷ்வரி, தலைமை காவலர் 162, கபில்தேவ் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்திலேயே மதுபாட்டில்களை கொட்டி அழித்து மகஜர் தயார் செய்து பின்னர் எதிரியுடன் அன்றைய தினம் 18.00 மணிக்கு நிலையம் ஆஜராகி பாரா காவல் வசம் ஒப்படைத்து, மதுவிலக்கு அமலாக்க பிரிவு குற்ற எண். 649/2024, U/s. 4(1)(C) TNP Amendment Act 2024 ன் கீழ் வழக்கு பதிவுசெய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆகும்.** எதிரியை 18.00 மணிக்கு நிலைய பிணையில் விடுவித்தேன். விசாரணை முடித்து எதிரி மீது 27.07.2024 ம் தேதி 4(1)(C) TNP Amendment Act 2024 ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை**

1. சம்பவ இடம் பொதுமக்கள் அதிகம் நடமாடக்கூடிய பகுதி என்றால் சரிதான். எதிரி

தன் வசம் வைத்திருந்ததாக சொல்லப்படும் பாட்டில்களில் மது இருந்ததாக எவ்வாறு தெரிந்துக்கொண்டேன் என்றால் அதை நுகர்ந்து பார்க்கும்போது தெரியவந்தது. நான் சொல்வதுபோல் அவ்வாறு கண்டுபிடிக்க முடியாது என்றால் சரியல்ல. மதுவுடன் சேர்த்து மதுபாட்டில்களையும் அழித்துவிட்டோம். மதுபாட்டில்களை அவ்வாறு அழிப்பதற்கு அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பதிவுசெய்யவில்லை.

2. பொதுமக்கள் யாரையும் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான், யாரும் சாட்சியமளிக்க முன்வரவில்லை. நான் சொன்ன நாள், நேரம், இடத்தில் எதிரியை கைதுசெய்யவில்லை என்றும், அவரிடமிருந்து மதுபாட்டில்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்காவணங்கள் அனைத்து காவல் நிலையத்தில் வைத்து வழக்கிற்கு ஏற்றால்போல் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு போலிசாரால் தாக்கல் செய்யப்பட்டு போலிசாரால் விசாரிக்கப்பட்டது என்றால் சரிதான். மேலதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க புள்ளிவிபர கணக்கிற்காக போடப்பட்ட பொய் வழக்கு என்றால் சரியல்ல. சரிவர புலன் விசாரணை மேற்கொள்ளாமல் தவறாக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

TAMIL ARASU A

Digitally signed by TAMIL ARASU A
Date: 2026.07.02 17:25:05 +0530